# தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்

**பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.**

**தலைமை இடம் - சென்னை.**

**S.நாகராஜன்** தலைவர்

**K.சந்திரசேகரன்,B.A.,** பொதுச்செயலாளர்

**B.தியாகராஜன்,M.Com.,** நிதிச்செயலாளர்

**சுற்றறிக்கை எண்: 01/2019** 31-01-2019

அன்பு கெழுமிய சங்க உடன் பிறப்புகளுக்கு பொதுச்செயலாளரின் வணக்கங்களும் வாழ்த்துக்களும்.

2019ம் ஆண்டு துவக்க திங்களின் இறுதி நாளான இன்று கீழ்கண்ட விபரங்களை இந்த சுற்றறிக்கை வாயிலாக உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெரிதும் மகிழ்கின்றேன்.

**இயக்க நடவடிக்கைகள்:-**

1. 10-12-2018 தேதிய சுற்றறிக்கையில் கேட்டுக்கொண்டபடி மாதாந்திர சுற்றறிக்கையினை அனைத்து பொறுப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்திட பொறுப்பாளர்களின் அஞ்சல் முகவரியினை பெரும்பாலான வட்டச்செயலாளர்கள் அனுப்பி வைத்துள்ளனர். இதுவரை அனுப்பிடாத வட்டச் செயலாளர்களை அவற்றை அனுப்பி வைத்திட மீண்டும் வேண்டுகின்றோம்.
2. அதேபோல் செய்திமடலுக்கான சந்தாவை செலுத்தாத உறுப்பினர்களிடமிருந்தும் சந்தா தொகையினை வசூலித்து உடன் செலுத்திடவும் வேண்டுகின்றோம்.
3. 2019ம் ஆண்டிற்கான உறுப்பினர் சந்தாவினை வசூல் செய்து மத்திய சங்கத்திற்கான பங்குத் தொகையின் முதல் தவணை 1.உடுமலை, 2.சென்னை மேற்கு, 3.சேலம் வட்டங்களிலிருந்து மத்திய சங்கத்தில் பெறப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். ஏனைய பகுதிகளிலும் சந்தாவினை வசூலித்து மத்திய சங்கத்திற்கான பங்குத் தொகையினை அனுப்பி வைத்திட நடவடிக்கைகளை மேற்கொண்டிட பொறுப்பாளர்களை வேண்டுகின்றோம்.
4. 28-10-2018 அன்று நடைபெற்ற சங்கத்தின் மாநிலச்செயற்குழுவில் முன்னாள் நிதிச்செயலாளர் திரு.E.சித்தையன் அவர்களை சங்கத்துணை விதி 20(c)ல் வரையறுத்துள்ள படி பொதுச்செயலாளருக்கு உறுதுணையாக பணியாற்றிட உதவிப் பொதுச்செயலாளராக நியமனம் செய்ததை, சட்டவிரோதமானது என்று கூறி அந்த நியமனத்திற்கு இடைக்கால தடை விதிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் சென்னை மைய வட்டத்தின் அண்ணா சாலை கோட்டச் செயலாளர் திரு.M.மில்டன் பிரிஸ் அவர்கள் தொடுத்த வழக்கு, விசாரணை முடிவுற்று கடந்த 25ம் தேதி இடைக்கால தடைவிதிக்க கோரிய மனுவினை தள்ளுபடி செய்து உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
5. சங்கப் பொறுப்பாளர்கள் தேர்தல் தொடர்பான வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் 26-07-2013 மற்றும் 09-04-2014 ஆகிய நாட்களில் வழங்கிய உத்திரவுகளில் வரையறுத்த நாட்களில் கிளைகள் மற்றும் வட்டக்குழுக்களின் தேர்தல்களை நடத்திடாத காரணத்தினால் நாகை மற்றும் திருவாரூர் வட்டங்களில் சங்க நடவடிக்கைகள் முடங்கி உறுப்பினர்கள் பாதிப்புக்குள்ளாகி வருவதை கருத்தில் கொண்டு **திரு.G.பார்த்தசாரதி**, கணக்கு மேற்பார்வையாளர், மத்திய அலுவலகம், நாகைவட்டம் அவர்களை நாகைவட்டத்தின் வட்ட அமைப்பாளராகவும், **திரு.G.தனசேகரன்**, கணக்கு மேற்பார்வையாளர், திருவாரூர் மின்பகிர்மான வட்ட மத்திய அலுவலகம் அவர்களை திருவாரூர் வட்டத்தின் வட்ட அமைப்பாளராகவும், அதேபோல் 2018 – 2019ம் ஆண்டிற்கான கிளை மற்றும் வட்டப் பொறுப்பாளர்கள் தேர்தலை செயற்குழு வரையறுத்த நாளான 31-03-2018ம் நாளுக்குள் நடத்திடாத கள்ளக்குறிச்சி வட்டத்திற்கு அமைப்பாளராக, **திரு.A.கோபால் M.Com.**, கணக்கு மேற்பாற்வையாளர் (ஓய்வு) சின்னசேலம், அவர்களை வட்ட அமைப்பாளராகவும், செங்கல்பட்டு வட்டம் திருப்பெரும்புதூர் கோட்டத்திற்கு சங்கத்திற்கு கிளை இல்லாத காரணத்தினால் **திரு.சிவக்குமார்**, வணிக ஆய்வாளர், ஒரகடம் பிரிவு அவர்களை திருப்பெரும்புதூர் கோட்டத்தின் கோட்ட அமைப்பாளராகவும் நியமித்துள்ளோம்.

6. நீண்ட காலமாக மத்திய சங்கத்தால் அங்கீகரிக்கப்படாமல் இருந்து கடந்த 28-10-2018 தேதிய செயற்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சென்னை மேற்கு வட்டத்தின் வட்டக்குழு கூட்டம் கடந்த 24-01-2019 அன்று சென்னை அண்ணா நகரில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக பொதுச்செயலாளரோடு சங்கத் தலைவர், அமைப்புச்செயலாளர், இணைச்செயலாளர் திரு.கணேசன், உதவிப்பொதுச்செயலாளர், எண்ணூர் மற்றும் வட சென்னை வட்டச்செயலாளர்கள் கலந்து கொண்டனர்.
7. அடுத்த திங்கள் மூன்றாவது வாரத்தில் நாகை, திருவாரூர் வட்டப் பகுதிகளில் மத்தியச் சங்கப் பொறுப்பாளர் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உறுப்பினர்களை சந்தித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**நமது கோரிக்கைகள்:-**

1. 25-01-2019 வாரியத் தலைவரை சந்தித்து தீர்வு காணப்பட வேண்டிய நிலுவைப் பிரச்சனைகள் குறித்து சங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்திட நாள் நிர்ணயித்திடவும்.
2. சிறப்பு நிலை முகவர் பதவி உயர்வினை தற்காலிகமாக துறந்தவர்களுக்கு ஆண்டு நிபந்தனையினை தளர்த்தி பதவி உயர்வு வழங்கிட அனுமதித்திட வேண்டும் எனவும்.
3. வேலைபளு ஒப்பந்தப்படி பொறுப்புகளை தாமதமின்றி அனுமதித்திட வேண்டும் எனவும்.
4. ஊழியர்கள் தொடர்பான அதாவது விருப்பமாறுதல் உள்முகத் தேர்வு போன்ற பிரச்சனைகள் குறித்து வழங்கப்படும் வாரிய உத்திரவுகளை தமிழில் வழங்கிட வேண்டும் எனவும் வற்புறுத்தியுள்ளோம்.

இயக்குனர் விநியோகம் அவர்களிடம் தூத்துக்குடி வட்டத்தில் சங்கத்திற்கு வழங்கியுள்ள கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்கிடவும், திருநெல்வேலியில் வழங்கியுள்ள சங்க கட்டிடத்தை பிரிவினை செய்யும் நடவடிக்கையினை கைவிடவும் முறையிடப்பட்டுள்ளது.

**வாரிய ஆணைகள் மற்றும் பதவி உயர்வு செய்திகள்:-**

01-12-2015 க்குப் பின் ஓய்வு பெற்றவர்களுக்கு புதிய ஊதிய விகிதம் மற்றும் திருத்தப்பட்ட ஓய்வூதிய பலன்களை உடனடியாக வழங்கிட Memo(Per) No:23292/A3/A31/2018-5, dated:31-12-18 வாயிலாக தணிக்கை அலுவலகத்திற்கு உத்திரவுகள் வழங்கப்பட்டுள்ளது.

உள்முகத் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் (கணக்கு) பொறுப்புகளுக்கு அட்டைப் பட்டியல் பணித்தொகுப்பை சார்ந்த கணக்கீட்டாளர்கள் (B.Com பட்டம் பெற்றவர்கள்)விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம் என Lr.No:053299/398/G56/G561/2018-2, dt:07-01-2019 வாயிலாக உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

இளநிலை உதவியாளர்/தட்டச்சர் (கணக்கு) பொறுப்பிலிருந்து உதவியாளர் (கணக்கு) பொறுப்பிற்கும், உதவியாளர் (நிர்வாகம்) பொறுப்பிலிருந்து நிர்வாக மேலாளர் பொறுப்பிற்கும் பதவி உயர்வு பட்டியல் அனுமதிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. ஒரு வாரகாலத்திற்குள் பட்டியல் அனுமதிக்கப்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டு விடும் என நம்புகின்றோம்.

நிர்வாக மேலாளர் பொறுப்பிலிருந்து உதவி நிர்வாக அலுவலர் பொறுப்பிற்கு பதவி உயர்வு வழங்கிட தகுதி உடையவர்கள் பட்டியலுக்கு பதவி உயர்வு குழு ஒப்புதல் அளித்துள்ளது. பதவி உயர்வு பட்டியலுக்கான வாரிய ஆணை மற்றும் வட்ட ஒதுக்கீடு உத்திரவு அடுத்த வாரம் வழங்கப்பட்டு விடும் என நம்புகின்றோம்.

தோழமையுள்ள,

பொதுச்செயலாளர்.

பெறுநர்: மத்திய சங்கப் பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள், வட்டத் தலைவர்கள், வட்டச் செயலாளர்கள்,வட்ட மகளிரணிச்செயலாளர்கள், கோட்டச் செயலாள்கள், உதவிகோட்டச் செயலாளர்கள் மற்றும் மத்திய அலுவலக கிளைச்செயலாளர்கள்